**செ.வெ.எண்: 59** **நாள்: 27.10.2021**

**நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம், நமக்கு நாமே திட்டம் மற்றும் நகர்ப்புற வேலைவாய்ப்புத்திட்டம் ஆகிய புதிய திட்டங்களை செயல்படுத்துதல் தொடர்பான மாவட்ட ஆட்சியரின் செய்தி குறிப்பு**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளாகிய நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம், நமக்கு நாமே திட்டம் மற்றும் நகர்ப்புற வேலை வாய்ப்புத்திட்டம் ஆகிய புதிய திட்டங்களை தமிழக அரசு அறிவித்து அரசாணை வெளியிட்டுள்ளது. இம்முதன்மைத் திட்டங்களில் மிக முக்கியமான நகர்ப்புற நமக்கு நாமே திட்டத்தின் மூலம் நீர் நிலைகளை புனரமைத்தல், பூங்காக்கள் அமைத்தல், பொழுது போக்கு மற்றும் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்துதல், பொதுசுகாதார மையம், கற்றல் மையம், சாலைகள், தெருவிளக்குகள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகளை நகர்ப்புறங்களிலும் செயல்படுத்தப்பட உள்ளதால், நீர் நிலைகளை ஆழப்படுத்துதல் மற்றும் கரை பலப்படுத்துதல் போன்ற பணிக்கூறுகளுக்கு (Work Component) மதிப்பீட்டில் 50 சதவீதம் மக்கள் பங்குத் தொகையும், இதர கூறுகளாகிய (Other Component) நடைபாதை, தடுப்புச்சுவர், விளக்குகள் மற்றும் பெஞ்ச் இருக்கை வசதிகள் போன்றவற்றிற்கு மற்ற அடிப்படை வசதி பணிகளை போல் 30 சதவீத மக்கள் பங்கு தொகையினையும் செலுத்தி பொது மக்கள் பயன்பெற்றிடவும், இத்திட்டத்தில் உள்ளூர் முக்கியஸ்தர்கள், குடியிருப்பு நல சங்கம், கல்வி நிறுவனங்கள், பொது அல்லது தனியார் நிறுவனங்கள் அல்லது சமுதாய அமைப்புகள் முன்வந்து தங்களுக்கு வேண்டிய அடிப்படை வசதி பணிகளை தேர்வு செய்து செயல்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப.,** அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**